# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:105** **தேதி 27.01.2012**

# மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

நமது மத்திய சங்கத்தின் செய்திகள் சிலவற்றை கீழே தந்துள்ளோம்.

**<u>கோவை பாராளுமன்ற உறுப்பினர் கடிதம்:-</u>**

கோவை பாராளுமன்ற உறுப்பினர் தோழர். P.R. நடராஜன் இன்று BSNL சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக தகவல் தொழில்நுட்பத்துறை நிலைக்குழுவின் தலைவருக்கு கீழ்கண்டவாறு கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

"BSNL மத்திய அரசுக்கு சொந்தமான தொலை தொடர்பு சேவை தரும் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். அது நாட்டிலேயே மிகப்பெரிய வலைத்தளம் கொண்டுள்ளதோடு நஷ்டம் ஏற்படும் கிராமப்புறங்களிலும் கூட தரைவழி சேவை, மொபைல், ப்ராட்பேண்ட் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட சேவைகளை கொடுத்து வருகிறது. வியாபார நோக்கோடு செயல்படும் மற்ற தனியார் தொலைதொடர்பு நிறுவன்ங்களும் கூட நாடு முழுவதிலும் உள்ள BSNLன் கட்டமைப்புகளையும், வலைத் தளங்களையும் பயன்படுத்தி வருகின்றன. இவற்றை தவிர 12ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் உருவாக்கப்பட உள்ள மத்திய மாநில அரசாங்கங்களின் மின்னணு ஆட்சிமுறை (e-governance) உள்ளிட்ட சமூக பொறுப்புகளும் BSNLக்கு உண்டு. கடந்த மூன்று ஆண்டுகளாக BSNL நிறுவனம் நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது. இந்த சூழ்நிலையில், தமிழகத்தில் உள்ள ஒரு சில உள்ளாட்சி அமைப்புகள் BSNL நிர்மாணித்துள்ள டவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை உரிமக் கட்டணங்களாக நிர்ணயம் செய்ய தீர்மாணித்துள்ளன என எனது கவனத்துக்கு வந்துள்ளது. இது தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியை அதிகரிக்கும்.

இது தொடர்பாக, BSNL நிறுவனத்திற்கு உள்ளாட்சி அமைப்புகள் இது போன்ற உரிமக்கட்டணங்கள் வசூலிக்க விலக்கு அளிக்க வேண்டும் என்ற உத்தரவினை கேரள அரசு, 30.10.2010 அன்று வெளியிட்டுள்ளதை உங்களது கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நாடு தழுவிய அளவில் வருங்கால கட்டங்களில் BSNLன் பொருளாதார சுமையை குறைப்பதற்கு, இந்நிறுவனத்திற்கு இது போன்ற விலக்கு அளிக்கக் கூடிய வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என நாம் பரிந்துரைக்கலாம்.

இதே போல பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள காப்பர் கேபிள்கள் மற்றும் கண்ணாடி இழை கேபிள்கள் ஆகியவற்றை பராமரிப்பதிலும் இந்த நிறுவனம் மிகப்பெரிய தடைகளை சந்திக்கிறது

எனவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அனைத்து தேசிய, மாநில நெடுஞ்சாலைகளிலும் விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகள் நடைபெறும் சமயத்தில் BSNL கேபிள்கள் பழுதடைகிறது அல்லது துண்டிக்கப்படுகிறது. அதனால் தொலைதொடர்பு சேவைகள் பாதிப்பதோடு, சந்தாதாரர்களுக்கு சிரமங்களும் ஏற்படுகிறது. BSNL நிறுவனத்திற்கு வருமான இழப்பும் ஏற்படுகிறது. இதனை தவிர்க்க நெடுஞ்சாலைகள் முழுவதும் DUCT அமைத்து கொடுத்து அதற்கு வருடத்திற்கொருமுறை ஒரு குறைந்த பட்ச கட்டணத்தை வாடகையாக பெற்றுக் கொள்ளலாம் எனவும் நாம் அரசுக்கு பரிந்துரைக்கலாம். அது தொலைத்தொடர்பு பயன்பாட்டாளர்களுக்கு தடையற்ற சேவையை BSNL வழங்க முடியும். இந்த DUCT களை மற்ற தொலைதொடர்பு நிறுவனங்களுக்கும் கட்டண அடிப்படையில் பயன்படுத்த அனுமதிக்கலாம்.

எனவே BSNLன் டவர்களுக்கு உரிமக்கட்டணங்களில் இருந்து விலக்கு அளிக்கவும், நெடுஞ்சாலைகளில் DUCT மூலமாக பயன்பாட்டு உரிமை வழங்கவும் உரிய வழிகாட்டுதல்களை கொடுக்கவேண்டும் என மத்திய அரசாங்கத்திற்கு நிலைக்குழு பரிந்துரைக்கலாம் என தலைவரை கேட்டுக் கொள்கிறேன்.'' தோழரின் முயற்சிக்கு நமது வாழ்த்துக்களும் நன்றிகளும்.

## NE-12 ஊதிய விகிதம்:-

24.12.2012 அன்று நமது பொது செயலாளர் தோழர் அபிமன்யு அவர்களும் துணை பொது செயலாளர் தோழர் அசோகா பாபு அவர்களும் TELECOM COMMISSIONன் MEMBER(SERVICES) திரு S.C. மிஷ்ரா அவர்களை சந்தித்து NE-12 ஊதிய விகிதத்திற்கு DOT யின் ஒப்புதலை விரைவில் பெற்றுத் தருவதற்கான தலையீட்டை செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டனர். அவரும் DOT யின் ஒப்புதலை விரவில் பெற்றுத் தருவதாக உறுதி அளித்தார்.

### 40% TTA தேர்விற்கான முன் தகுதி தேர்வு:-

10+2 தகுதி இல்லாத தோழர்களுக்கு 40% TTA தேர்விற்கான முன் தகுதி தேர்வு நடத்த வேண்டுமென நிர்வாகத்தை BSNL ஊழியர் சங்கம் தொடர்ச்சியாகவும் வலிமையாகவும் வற்புறுத்தி வந்தது அனைவரும் அறிந்ததே. இந்த சூழ்நிலையில் கேரள உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் கார்ப்பரேட் அலுவலகம் 40% TTA தேர்வினை நடத்த உத்தரவு வெளியிட்டுள்ளது. ஆனால் அதில் 10+2 தகுதி இல்லாத தோழர்களுக்கு முன் தகுதி தேர்வு நடத்துவதற்கான வழிவகை செய்யப்படவில்லை. 24.01.2012 அன்று நமது பொதுச்செயலரும் துணைப் பொதுசெயலரும் பொது மேலாளர்(நிர்வாகம்) அவர்களை சந்தித்து முன் தகுதி தேர்வு நடத்த வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர். இது தொடர்பாக நிர்வாகம் விரைவில் முடிவு எடுக்கும் என நம்புகிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**

**மாநில செயலர்.**